செ.வெ.எண்: 40/மார்ச் நாள்: 23.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பார்த்திபனூர் மற்றும் கமுதி ஆகிய பகுதிகளில்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் மற்றும் கமுதி ஆகிய பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளின் மூலமாக பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சிகிச்சைக்காக வருகை தந்துள்ள பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி , நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டும் என்று எடுத்துரைத்தார். மேலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் அனைவரும் பார்த்து வாக்காளர் விழிப்புணர்வு பெற்றிடும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லைகளை (Stickers) ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதேபோல கமுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சிகிச்சைக்காக வருகை தரும் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கியும், வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லைகளை ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முன்னதாக, பார்த்திபனூரில் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையமான அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**